## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 88/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | கீதா |
| Husband Name | : | சௌந்தரராஜன் |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 33 |

**Both accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.06.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது காங்கேயத்தில் குடியிருந்து வருகிறேன். நானும் எனது கணவரும் காங்கேயம் – திருப்பூர் ரோட்டில் சிவசக்தி விநாயகர் கோவில் முன்பு காயத்ரி மெஸ் என்ற பெயரில் தள்ளுவண்டி கடை வைத்து நடத்தி வருகிறோம். கடந்த 25.11.2023 ம் தேதியன்று இரவு 7.00 மணியளவில் ஆஜர் எதிரி நாகராஜ் எனது டிபன் கடைக்கு அன்றைய தினம் சாப்பிட வந்தார். அப்போது ஆஃப்பாய்ல் வேண்டும் என்று கேட்டார் நான் ஆஃப்பாயில் போட முயற்சித்தபோது முட்டை உடைந்து கலங்கிவிட்டது. அதனால் அதற்கு பணம் தரமாட்டேன் என்று என்னிடம் கூறிவிட்டு சென்றுவிட்டார். மறுநாள் ஆஜர் எதிரிகள் சதீசும் நாகராசும் இரவு 8.00 மணிக்கு எங்கள் கடைக்கு வந்து தள்ளுவண்டி கடையை அங்கே போடக்கூடாது என்று சொல்லி நிறைய ஆட்களை கூட்டி வந்து எங்களிடம் தகராறு செய்தார்கள். அப்போது நாங்கள் அப்படித்தான் கடையை போடுவோம் என்று சொன்னோம். அதற்கு ஆஜர் எதிரி சதீஷ் என்னை பார்த்து கண்டாரோழி என்று கூறி நீ எல்லாம் ஒரு பொம்பளயா என்று கேட்டுவிட்டு ஓரமாக போ என்று கூறி குழந்தையுடன் நின்றுகொண்டிருந்த என்னை எதிரிகள் இருவரும் கீழே தள்ளிவிட்டார்கள். அதில் எனக்கு வலது

தோள்பட்டையில் மொக்கையாக அடிபட்டு வீக்கம் ஏற்பட்டது. அப்போது எங்கள் கடையில் இருந்த  எனது கணவரும் எனது கொழுந்தனார் கோபாலும் வந்து ஆஜர் எதிரிகளை தடுக்க முயற்சித்தபோது அவர்களுடன் வந்திருந்த சுமார் 10 நபர்கள் சேர்ந்து  எனது கணவரையும் கொழுந்தனாரையும் அடித்தார்கள். அப்போது சம்பவ இடத்தின் அருகில் இருந்த தர்ஷனையும் ஆஜர் எதிரி சதீஷ் அறைந்துவிட்டார். கூட்டத்தில் இருந்த ஒரு நபர் என்னை பார்த்து தான் கத்தி வைத்திருப்பதாகவும் மீறி பேசினால் கத்தியால் குத்திவிடுவேன் என்று கூறினார். அப்போது அவர் கை உடைந்து கட்டு போட்டிருந்தார். பின்னர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவிப்பதாக சொன்னோம். அதற்கு பின்னர் ஆஜர் எதிரிகளும் மற்றவர்களும் கலைந்து சென்றார்கள். பின்னர்  எனக்கு தோள்பட்டையில் அதிகாமாக வலி இருந்ததால் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது கணவர் என்னை அழைத்து சென்றார் அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனை சென்றோம். காங்கேயம் போலீசார் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு வந்து சம்பவம் குறித்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.06.24 17:14:15 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்